10 JAN 1996

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

[1995, நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1995, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 80 தபாற் செலவு : ரூபா 2.00

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல்
(விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்)

[1995, நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ. 1/94

**1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூறும் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்படும் கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 22 ஆம் பிரிவு, "வங்கி" என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"வங்கி" என்பது —

(அ) 1985 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிராந்திய கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் வங்கி நீங்கலாக, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட வர்த்தக வங்கியொன்று என்றும் ;

(ஆ) (165 ஆம் அத்தியாயமான இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என்றும்; அத்துடன்

(இ) 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி என்றும்

பொருளாகும்.".

3. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,267 (வெளிநாட்டு) ரூபா 1,563 ஒவ்வொராண்டும் நவம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் கிடைக்கும் ஆண்டின் சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டு அலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், கோட்டை ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.